உ

கணபதி துணை

அரமனைச் சிறுவயலைச்சார்ந்த

களத்தூர் ஐயனார் பேரில்

# பதிகமும், பஞ்சகமும், அகவலும்

ஷை யூர் கறு.ஆ.ஆறுமுகஞ் செட்டியார்

இயற்றியவை

பொள்ளாச்சி முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

நா. கனகராஜையரால்

பரிசோதிப்பித்து

ராம.அரு.சொக்கலிங்கஞ்செட்டியாரால்

பொள்ளாச்சி விவேகானந்தா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றன.

1923

உ

முருகன் துணை

# களத்தூர் அய்யனார் பதிகம்

**காட்பு**

செல்வக் களத்தூர் சிறக்க வமர்ந்திருக்கும்
செல்வன் அரியரனார் செல்வன்மேற்--சொல்பதிகம்
வேதப்பொருளாகும் வேழமுகத் தைங்கரனார்
பாதத் துணை கொள்ளும் பார்.

**சரஸ்வதி**

வெறிகமழு மலர் பொதுளூந் தண்டலைசூழ்
திருக்களத்தூர் மேவாநின்ற
வெறியயில்சொ ளறியரன்சே யெமை
யுடையான் புகழ்பரவி யிசைக்கு மிந் நூல்
அறிவுருவமாய கலைமகளருளாற் சிறப்புடைந்
திவ் வவனி மீது
செறிவினிமை பொருளமைதி நலஞ்சிறந்து
பொலியுமென தெளிவுற்றேனே

**அவையடக்கம்**

கலையறிவு சிறிதேனும் முறுமுறையிற்

பெரியோரைக் கலந்து போற்றும்

நிலைறியா விழலேனு முளத்தெழுந்த

வாசையினா னிகழ்தப்புக்க

தலைமை பெறு மெமையுடைய வையனார்

திருப்பதிகம் தரணிமீது

புலமையுளார் போற்றலுறும் பெருமையுறு

மவன்புகழை பொருந்தலாலே

**ஆக்கியோன் பெயர் முதலியன**

தனவணிக குலத்தவர்கள் வழிவழியாய்ப் பெருகியறம் தழைக்கச்செய்யும்

புனவணிகவின் பெருகு கல்விநகர் வாழ்ந்த தமிழ்ப் புலமை சான்றேன் இன
வணிக ளமைந்தமிழ் ழிலக்கணமு மிலக்கியமு மியையக்கற்றோன்,
கனவணிகர் குழையுடயான் ஆறுமுகன் ஐயனிசைக்கவி செய்தானே

## நூல்

மலர்க்கரந் தாங்கி மாயோன் வளர்ந்திட வளர்ந்தசேயே பலர்க்கிரங்குளத்தான் மிக்க பத்தராற் பாவப்பட்டாய், வலக்கரத் தபயந் தந்து வரதனே யெம்மை யாள்வாய் குலச் சிறப்புங் களத்தூர்க் கோயில்வாழ் மையனாரே

வணங்குவார்நினைத்தவெல்லா மகிழ்வுடனருளிக் காக்க, விணங்குவாய் எண்ணி லாநல் வரங்களும் ஈவாயென்றும், மணங்குலாம் பொழில்கள் சூழ்ந்த வண்டமிழ்ப் பாண்டிநாட்டில், குணங்குலாந் திருக்களத்தூர்

கோயில்வா மையனாரே

கடுக்கையுங் சங்கையாறும் கதிரிளம் பிறையுஞ் சூடும், உடுக்கை யேந்திய கையெம்மான் உளங்கனிந் தரியும் பெண்டாய், அடுக்கை கண்டனைந்து பெற்ற வரும்பெறல் மைந்தா தானம், கொடுக்கைவாழ் திருக்களத்தூர்க் கோயில்வா மையனாரே.

தாருக வனத்து வாழ்ந்த தவசியர் தவத்தர் பெண்டிர், பாருகளனைத்து மாகும் பாமனை மாய்க்க வெண்ணிப் போரியற்றிய நாள்வந்து புவியிடைத்

தோன்றி வாழ்வாய் ஆரருள்புரி களத்தூர்க் கோயில்வா ழையனாரே.

பூரணியொருபால் நிற்கப்புட்கலை யொருபால் நிற்க, ஆராண மறிய லாகா வரியரன் மதவாய் வந்தாய் காரணப் பொருளாய்நின்ற கருணை வாரிதியே யாள்வாய், கோரியதருங் களத்தூர்க் கோயில்வா ழைய்யனாரே.

போற்றிய சுரர்கட் கின்பம் போற்றார்க்கு துன்பந் தந்து, சாற்றிய பழஞ்சொல் மெய்ம்மை தாபிக்கவந்த சாத்தா, பரனாற்றிய வினையேனாக்கிய பதம் பெரு நிலை தந்தாள்வாய், ஆற்றிய நலக் களத்தூர்க் கோயில்வா ழையனாரே.

இலச்சினை விடையாக் கொண்ட வெம்பிரான் தந்தையாக

மிலைச்சியதுளவத்தம்மான் மேவிநற்றயாய்ச்சேரப்,
பலச்சினைமிகப்பெற்றேங்கு  பழம்பெரும் வனத்தில்வந்தோய்
கொலைத்தொழில் தவிர் களத்தூர் கோயில்வா ழையனாரே.

இலச்சினை விடையாக் எல்லாம் விடையாக் கொண்ட வெம்பிரான்
தந்தையாக, மிலைச்சியதுவளத்தம்மான் மேவியநற்றாய்சேரப்
பலச்சினைமிகப்பொற்றேங்கு பழம்பெருவனத்தில் வந்தோய்,
கொலைத்தொழில் தவிர்களத்தூர் கோயில்வா ழையனாரே

வேண்டியவரங்களெல்லாம் விழையுட னடியார்க்

கீந்து பூண்டிய விசையி னோங்கு புலவராற் பாவப்

பட்டாய், தேண்டிய வின்பமுத்தி சிறப்புறவளிக்குந்
தேவே, ஆண்டருள் திருக் களத்தூர் கோவில்வா ழையனாரே

நிறைதவ முடையார்க் கேனும்நீளறம் புரிந்தார்க் கேனும்,
குறைவில்மெய்யின்பத்தோற்றங் குறுகுதல் நின்னாலன்றி,
முறையுறவமைதல் உண்டோ முழுமுதற் செல்வவாழ்வே,
அறைபுகழ்மிகுங்களத்தூர்க்கோயில் வாழையனாரே.

அன்பினால்நின்பால்வந் துனடி தொழுமடியராவார் இன்பமார்நிலயமெய்த
வியற்றுவாய் தேவதேவே வன்பினால்மிகுந்தோர்செம்மை வழிப்படா
முறையுஞ் செய்வாய், கொன்றையார்திருக்களத்தூர்க் கோயில்வாழையனாரே.

**வாழ்த்து**

வாழிதிருக்களத்தூர் வாழியுடையவையன்

வாழியவனடியர் வாழியரோ ஏழிசையும்

செந்தமிழு மாராய்ந்த தென்பாண்டி நாடுடைய

அந்தணரு மற்றையரும்.

உ

## திருக்களத்தூர்
## உடைய அய்யனார் பஞ்சகம்
### காப்பு

திருக்களத்தூர்ச் செல்வன் சிவன்றிருமால் மைந்தன்
கருக்களத்தூர் புன்மை கடிவான் திருப்புகழை
ஐந்துகவி யாயிற்ற ஐந்துகரத் தும்பிமுகன்
கந்தமலர்ச் சேவடிகள் காப்பு

### நூல்

அகரமே யுகரமே மகரமே யென்று மூன்
றாக்கரத்தாலமைந்த
அருவமே யுருவமே யருவுருமாகின்ற
ஆனந்தவருள் நிலயமே
மகரமே யெரிகடலை யுடைகொண்ட நிலமிசையும்
வானகத் தேயுமசுரர்
வதைபுரிய முற்படப் பழி பாவ மிக்குறுதல்
மனமலரில் நன்கறிந்தே
சிகரமே பொன்னுற்ற வெள்ளியங்கிரிவாழ்ந்த
தேவ தேவேச னருளச்
செகதலந்தனிலுற்று மிகுமவுணர் வலிகெடச்
செய்வித்த கருணைமுகிலே
ககரமும் திகரமும் பணிவார்க்கு நல்வாழ்வு
காட்டியருளுடைய்யனே

களித்தடைந் திடுதொண்ட ருளத்தடைந் திறை

கொண்ட, களத்திவந் துறை யையனே

எந்நாளு நின்புகழை எண்ணி மகிழ் நெஞ்சகமு

மேத்தித்துதிக்கு நாவும்

எளியனேற் கருள்புரிகவென வேண்டியடியார்கள்

எண்ணிலார் பணிபுரியவே

பொன்னாளு மன்னனாம் தனதனோ விவனென்று

புவியுளோர் வாழ்த்துரைக்கப்

பொன்னருள்வை நிலனருள்வை மனை யருள்வை

மகனருள்வை போதமுந்தந்தருள்வையே

முன்னாய துணையென்று நின்னன்புபுரியாத

மூடர்களை முன்னிழுத்தே

முறை முறையினேதித்து தித்தப் புகழ்ந்துனடி

முளரியிணை போற்றவைப்பாய்

கண்ணாவெச்சொலியுலோயர்களைவாழ்த்தாத

கருணைபுரியுடைப்பனே

களித்தடைந்திடுதொண்டருளத்தடைந்திறை

கொண்ட, களத்திவந்துறையையனே

இவ்வுலகவாழ்வினிற் சிலகாலநுன்னிலையும்

இன்பமுஞ்செல்வவாழ்வும்

இளையாதசெல்வாக்கும் வளையாதபெருமிதமும்

எதிராதுபகைவர்பணிவும்

செவ்வியூமமைந்திருப்போர்நினது சேவடிச்

செங்கமலமுற்பிறப்பில்

திதிவாரநாளொன்றும் வழுவாதுபுரிபூசை

செய்துவருபயனென்னவே

எவ்வமறவுணர்வார்கள் ஔவியமாற்றி நின்

னிணையடிகள் பூசைபுரிவார்

இப்பிறப்பிலுமின்னு மினிவருபிறப்பிலும்

இன்பப்பெருக்கெய்தவே

சவ்வியமெயன்பர்க்கு திவ்வியமெயன்புடைய

கைய வெம்முடையையானே

களித்தடைந்திடுதொண்டர் உளுத்தடைந்நிறை

கொண்ட களத்திவந்துறையையனே

பூவுலகவைத்தியர்கள் தீராதுபிணியென்று போக்கியபல்பிணியாளரும்

போந்துநின்னருள்பெறத்திருநீறு காப்பிடிற்

புரையற்றவின்பமடைவார்

பாவியர்கள்சண்டாளர் கொலைகாரர் நின்னுடைய

பாதம்புகழ்ந்தாரெனில்

படுநரகி லாழ்திடார் சுரருலகில் வாழ்ந்துமே
பாக்கியப் பயனெய்துவார்
சாவியுறமழையற்ற நாளினுன்கருணைமழை
தழைவுறச் செயுநிலமெலாஞ்
சலியாத வளமாகி வளவனா டென்னவே
தமிழ்நாட்டை யாக்குவிப்பாய்
காவிவிழி யிணைகொண்ட தேவியிரு வோர்மகிழ
கந்தமலர் மாலை கொண்டாய்
களித்தடைந் திடுதொண்ட ருளத்தடைந் திறை
கொண்ட, களத்திவந் துரையையனே.
முத்தமிழின் வகையுமைங்கவிவகையு மறிகிலேன்
மூவெட்டு நான்காமென
முதல்வனருள் பெறுபுலவ ரருளியபிரபந்தவகை
முறைமுறையி னாய்ந்தறிகிலென்,
சுத்தமனமுடையவர்கள் சென்றநிலையோர்ந்துநெறி
சொற்றநூ லோதி யறியேன்
சொன்னபுன் சொற்றொடையூ நன்னையத்தொடை
யலாய்ச், சூடியருள்புரியவருவாய்
பத்தர்மனமலரில்விளை யாடிவரு செல்வமே
பழமறையினடிமுடிவுமாம்
பரமனருள் மதலையே யறிவினிலையறிய வரு

பாதாரவிந்த மருள்வாய்
கைத்துடைய வாழ்வருளி யுத்தமநல்வாழ்வுதவு
கருணைமுகிலுடையயனே
களித்தடைந்திடு தொண்ட ருளத்தடைந்திறை
கொண்ட, களத்திவந்துறையையனே

**களத்தூர் அய்யனார் பஞ்சகம் முற்றும்**

**அகவல்**

உலகம் படைத்தளித் தொழிக்கும் பூரணன்
பாற்கடல் நாகப் பள்ளியிற் றுயின்றேன்
தாருக வனத்துத் தவசியர் பொருட்டுப்
புலவோர் துதிக்க நிலவோர்மதிக்க
ஆண் பெண் ணாகி யவனியி லடைந்து
சஞ்சரித் திடுகையிற் சனன மாகிய
ஐயனேமெய்யனே கையனே துய்யனே
சராசாநிறைந்த பராபரமூர்த்தி
சச்சிதானந்த சர்வ பரிபூரணா

ஆரண காரணி பூரணி புஷ்கலை
மேவிய நாதா மென்மலர்ப் பாதா
கயிலை நாதன் கையில் பிறந்த
கத்தனே சுத்தனே கார்நிற மேனி
அத்தனே அமலா ஆனந்த ஜோதி
நித்திய சொரூபா நீள்சுடர் விளக்கே
பித்தனே கருணை பேரின்ப மோன
பதம்பெறு முனிவோர்க் கிதந்தருந் தலைவா
உலக சுதந்திர உம்பர் நாயக
அன்பர் வினைப்பயம் அகற்றி யருள்வாய்
வாமபாகத்தில் வளர்கருப்பண்ணனை
இயைபுற வமைத்த வெம்முடை யப்பனே
அடுத்துப் பணிவோர்க் கடுத்த நல்வரங்
கொடுத்துப் பணிகொளுங் கோமான் நீயே
பணிந்தோர்க் கெல்லாம் பலவகை வாழ்வும்
பெருக வருள்செய்யும் பேரின்ப நிலையே
புவன மனைத்தும் அனைத்தும் பொன்முடி சூடி
நவகண்ட மாளும் நாதா நினதருள்
யாவர்க்கு மெய்துதல் எளிதோ வரிதோ
நின்னுடை யன்னையாய் முன்ன மமைந்த
காரண ணான பூரண னல்லோர்
கோவலர் பொருட்டாய்க் கோவர்த் தனகிரி

குடையாய்ப்பிடித்தான் குணமே நின்பால்
அமைந்ததோ வவன்றன் அளவிலாமாயை
எம்பொருட்டாக நின்பா லமைந்ததோ
நெஞ்ச மொறுமையாய் நின்பால் நிறுத்திப்
போற்றுவோர்க் கேற்ற புந்தியும் மருள்வாய்
அன்பர்கள் நிலைதவிர்ந் தலறவும் வைத்தாய்
திருஉளக் கருத்து சிறியரை வாட்டுமே
எங்கும் இருளாய் எம்மனேர்க் கருளாது
அமைவுட னிருப்ப தமைதியோ முறையோ
ஏகநா யகனே யோக நாயகனே
யாகநா யகனே தியாசநா யகனே
சதுமறை மூல தாமத மகற்றி
இராசத குணமு மெய்தா தழுத்திச்
சத்துவ குணமே தழைத்திட வருளி
வந்துநின்றிருவடி வழுத்துவோர்க்கெல்லாம்
வரந்தந் தருள்வாய் வரதநா யகனே
வாழ்வு தருவாய் தாழ்வு நீக்குவாய்
நின்புகழ் பாடியெம் நீள்கிளை யோங்கத்
துயரிலா வாழ்வி லயர்விலா திருக்க
அடியோம் வேண்டிய படியெலா முதவி

முன்னெழுந் தருளுவாய் முதுமறைப் பொருளே
இன்புற வெளியே னியம்பிய புன்மொழி
துதிமொழி யெனவே மதியினிற் கொள்வாய்
தினப்பொழு தளவினில் திருந்திழை பூரணி
புட்கலை யுடனே புறப்பட்ட டைந்து
நினைத்த வரமெல்லாம் நிலையுற வருள்வாய்
ஞான மோன நன்னெறி யருள்வாய்
உலக வாழ்வி லுயர்நிலை யருள்வாய்
கல்வியிற் சிறப்புங் கணிப்பு மருள்வாய்
பதயுகம் வணங்கும் பக்தனைருளே
பொழியும் விழியாற் புரையற நோக்குவாய்
அழல்விழி யுடையான் அரும்பெறல் மைந்தா
சிவபெரு மான்றன் றிருவடி தேடிய
கண்ணன் புதல்வா காரண தேவா
அண்ண லாரூர ராகிய சுந்தரர்
காழியம் பதியில் வாழியற் புலவர்
வாக்கி னாரசம் வண்டமிழ் நாவலர்
வாதவூர் வந்த மாணிக்க வாசகர்
என்னு நால்வர் பன்னுந் துதிகளை
விருப்புட னேற்கும் பொறுப்புறை பெருமான்
மைந்தனே புலன்கள் ஐந்தினை வென்ற

முனிவோர் மணைத்தும் முறைமுறை நூல்தெரி
புலவோ ரகத்தும் பொருந்தும் பெரியோய்
தென்றமிழ் நாட்டில் திவ்ய தலங்களுள்
மிகச்சிறப்புற்று விளங்கும் புகழ் சால்
குமரவே ளமர்ந்த குன்றக் குடிக்கும்
காளை யூர்வோன் காளையார் கோவில்
நகர்க்கு மிடையில் நடுநிலையாகிய
அரமனைச் சிறுவய லதனைச் சார்ந்த
களத்தூ ருடைய கருணைச் செல்வனே
சிறப்பிற் சிறந்த சீனக் கண்மாய்
உள்வா யமைந்த உயருங் கோயில்
தலைவா வானோர் தலைவா வெம்மை
அடியரா யேற்று னடியினை யருள்வாய்
பாண்டிய வேந்தராற் பண்டைப் பரிசொடும்
ஈங்கடைந் திருக்கு மேங்குல வகுப்பில்
மாத்தூர்க் குடியில் வந்த ஆறுமுகன்
செப்பிய கவியுந் திப்பிய மென்றே
ஏற்றருள் புரிவாய் எம்பெரு மானே
நல்லோர் சேர்க்கையும் நாவலர் வாழ்த்தும்
எம்மவர்க் கருள்வாய் எம்முடை யப்பனே
விதியால் நேர்ந்து விளைபல னெல்லாம்

நன்மையாய்த் தீமையாய் நாங்கள் முற்பிறப்பில்
செய்ததற் கேற்பச் சேர்வன வேணும்
தீமையை மாற்றி சிறந்த நன்மையாய்
நினைப்பணி வோர்க்கு  நீயமை விப்பாய்
நின்னைப் பணியா நீசர் தமக்கே
முன்வினைப் பயணா முழுவது நன்மை
அமைந்திருந் தாலும் மவர்கள் வருந்தித்
துயர்வுறச் செய்வாய் யயர்வுறப் புரிவாய்
அரமனைச் சிறுவயற் கருகினி லுள்ள
மாத்தூர் உடையான் தோத்திர மேற்பாய்
சீனக்கண் மாய சேகராமாகிய
திருக்களத் தூரிற் றிருக்கோயில் அமர்ந்த
உன்னாலன்றி யுலக வாழ் விடையில்
அடியார் கூட்டத்தி லமைதியுண் டாகுமோ
இன்னே யுன்னை யெண்ணிப் புகழும்
நெறியும் நினைக்க நின்னார் பெற்றோம்
ஆதலா லுன்ற னருள்மழை பொழியவே
காதலா லடைந்தோங் கருணையுற் றருள்வாய்
எம்முடைய யப்ப எம்முடைய யப்ப
நகர மரபினர் நன்கமைத் திட்ட
ஆலயம் வாழும் ஆதி நாதனே

ஞானச் சுடரொளி மோனப் பெருக்கே
பத்தர்க் கருள்செய்யும் பராபர நாதா
சித்தமா யுலகஞ் சிறப்பிக்கும் வேதா
முந்நூல் தரித்த முடிப்பெரு மானே
நன்னூல் விரித்து நகராள் பவனே
நின்று துதித்து நின்பதம் போற்றினேன்
அடியேற் கருள்மழை யிடைவிடாப் பொழிந்து
இருவினை யச்சமு மிறையே யிகழ்ந்து
இன்பப் பெருக்கி லிடைலிடா தாழ்ந்து
திளைக்க விரும்பினேன் திருவருள் புரிவாய்
அழகிய நல்லுடை யையனே போற்றி
புளகித நாமப் புனித போற்றி
ஐயனே போற்றி ஆதியே போற்றி
மெய்யனே போற்றி விமலனே போற்றி
துய்யனே போற்றி சொர்னமே போற்றி
கையனே போற்றி கழலடி போற்றி
போற்றி போற்றி போற்றி போற்றியே

**அய்யனார் அகவல் முற்றும்**

**சுயம் பவது**

உ

கணபதி துணை

# ஆலம் பற்றுப் புத்தூருணி

## சித்தி விநாயகர்

## பதிகமும் பஞ்கமும் அகவலும்

---------------------------

சு.கி. கருப்பன்செட்டியாராலும்

நா. கனகராஜையராலும்

இயக்கப்பெற்று,

ராம.அரு.சொக்கலிங்கஞ்செட்டியாரால்

பொள்ளாச்சி விவேகானந்தா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றன.

**1923**

# சித்தி விநாயகர் பதிகம்

-------------------------

## ஆக்கியோன் பெயர் முதலியன

திருமருவு தென்பாண்டி நாட்டுனிற்றவை வணிகர்
சேகரமதாயிருக்கும்
செல்வவள மிக்கதொரு கல்விமாநக ரதனிற்
றிக்கெட்டு மிசை மிக்கதாம்
வரமருவு குடியதனில் வருபெரியர் வழிவந்த
மாத்தூரில் லிசைகின்றதாம்
வளர்க்கறுப்பூருடைய வம்சத்துவந்தபுகழ்
வாய்ந்துள்ள பெரியோர்களில்
திரமருவு கலையுடைய ஆறுமுகன்மைந்தனாய்ச்
செயமிக்க கிருஷ்ணப்பனாம்
சீரியன் சுவீகார மைந்தனாய் வந்திட்ட
செல்வக் கறுப்பண்ணனே
அரன்மகிழு மகனாம் விநாயகனை வாழ்த்தியே
அணியுடன் பதி மாக்கி
அதிசநல முற்றன்பர் புகழ்மிகவு முற்றனன்
அவனிதனில் நீரிழியே

------------

# கணபதி துணை

ஆலம்பற்றுப் புத்தூருணிச்

# சித்தி விநாயகர் பதிகம்

## காப்பு

பூக்கொண்டருச்சித்துப் போற்றிசெயு மன்பர்களைக்
காக்குங் குணங்கொள் கணபதியை பாக்கொண்டு
அணிந்து பதிகஞ்சொலவே யன்னான் செம் பொற்றாள்
அணிந்து சிரமீ கொண்டனன்

## நூல்

சீர்மேவு கல்வி நகர் வாழ்கின்ற வணிகர் குல திலக
கனாஞ் செய்யநேமஞ் செயங்கொண்ட சோளீசர்
தையல் சௌந்தரிபதந் தினந்தினந் துதிக்கும் மன்பன்
வார்கொண்ட புவிதனில் வள்ளலருணாச்சலம் வாத்தினா
லீன்றபாலன் வண்மையுறு சொக்கலிங்கம்மென்ற வீ
ரப்பன் மனமகிழ்ந் துவகைபூண்டு, பேர்பெருகு மால
யம் பிரணவசொருபற்குப் பிரபலமதா யமைத்து பிர
திஷ்டைசெய்துமே தீபதூபங்களொடு பெருகிவளர்
கின்றகாலை,ப் பாரதியண்டப் பரப்பெலா முறுகின்ற
பக்தர்கள்வந்துபணியும் பகமேருமாலநகர் புத்தூரு
ரணிக்கரை பகர் சித்திவிநாயக்க் கடவுளே (1)

கருவிமா முகிலினஞ் சூலுளைந் தலரியே கனமு
டன் வருஷித்திடும் கடவுள்மா நதிதடம் பெருகியே
திரையுடன் களிப்புறப் பரவுநீரும், தருவுதவு பூம்பொ
ழில் தற்பெருமை காட்டியேதழைத்துமது சொரியு நீ
ருக், தடதடெனவந்துபண்ணைகடொறும் பாய்தலாற்
றக்கபடி செந்நெல்ஓங்கி, திருமருவு சற்சனர்கள் வரு
ஷமதுவறாது சிறந்தமகேசுவரபூஜைகள் செய்து வரு
புகழ்தர வாதுலர்கள்மகிழ்வுடன் சென்றிடக்காணுகின்
ற, பரிதிமதிநுதல்விழிகள் மூன்றுடைய பரசிவப் ப
ண்ணவன்னருள் பாலகா பகமேறு மாலநகர் புத்தூரு
ணிக்கரை பகர்சித்தி விநாயகக்கடவுளே (2)

பெரியவர்கள் வாசமும் சமாதி நிலை யுற்றிடும் பிர
பலமதான சீரும் பின்பற்றுமடியவர் துதிக்கின்றகோ
ஷமும் பிரகாசமாய் விளங்கும், வரியவர்கள்வந்துமே
பணிந்திடும்போதெலாம் மாறாதசெல்வந்தரும் வளங்
களுமிகுந்திட வள்ளல்களுமீந்திட மாதமும்மாரிபொ
ழியும், தெரிவையர்கள் மாயையிற் சின்னப்பின்னப்
படச் சிக்காது செய்வித்திடும்-தெள்ளமுது கற்பகவி
ருட்சமுதலானதும் சிறந்தபலனைக்கொடுக்கும், பரிம
ளமிகுமலர வீழ்ந்திட வண்டினம் பாரகீதங்கள்பாடும்

பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை பகர்சித்திவிநாய
கக்கடவுளே (3)

கங்கையோடு தும்பையுங் கடுக்கையொடு பிறை
யையுங் கருதியே யுணியுமீசன்-களிட்டனீன்றிட்ட
வைங்கரக்களிற்றினைக் காணுதற்கெளிதாகுமோ, அங்
கையோடு மலர் தூவி அந்தமில்நாமத்தை அநேகநா ள
ர்ச்சித்துமே-அன்பினோடு மென்புருக அரியதவமெய்
திட அருள்புரிவர் மனமிரங்கி, நங்கையுமை பாலகா
விங்குலவுவினைகளை நசுக்கிரக்ஷினைசெய்திட-நானுனைப்
புகழுதற் கருகனலனென்பதனை நன்குநீதெரிந்துகொ
ண்டாய், பங்குமுறுமசுரர்கள் துன்பந் துடைத்திடப்
பரமாத்மா ராமர்பணியும்-பகமேறும் மாலநகர் புத்தூரு
ணிக்கரை பகர்சித்திவிநாயகக்கடவுளே (4)

ஒருகோடு மூன்றுவிழி திருநுதற்கயமுகம் உயர்
வாயு மத்தமைந்தும்-உபயபாதங்களும் பேழைவயி
றுங்கொண் டுரியசித்தி புத்திகளைமருவும், திருமேனி
யைக்காண அநேகநாள் தேடியும் சித்தமதிரங்கவில்லை
செய்திடுங் குற்றங்க ளளவில்லை யென்னினுஞ் சிறிய
னுன் பிள்ளையலவா, உறுதிபெறவுன்றனைப் பூசிக்கும
டியருள் ஒருவனுளனென்றுவுன்னி-உலகமயல்தீரவு

ம் உ யர் கதியிலேறவும் உகந்தனைக் காத்தருளுவாய்
பரையுதவு மைந்தனே வல்லபையின் நேசனே பக்தர்
கட் கனுகூலனே-பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை
பகர் சித்திவிநாயகக்கடவுளே (5)

ஓதுமறை யாகம் மிதிகாசமுதலாய துன்னையே
போற்றிசெய்யும்-உன்பதம்பணிகின்ற பக்தரைவரை
ந்திடஒரு கோடி வயது போதா, ஏதுமறியாமல்யா ன
றையுமொழிதவறினும் ஏழைமேற் கிருபை கூர்ந்து
இன்பமது வாகவே மழலைமொழி யென்றுநீ யேன்று
கொள்ளுவ துன்கடன், சீதசிகி தனிலூரு செட்டியு
முன்றம்பி சிறைதந்து நீக்கியருள்கை-செய்தியும்நீய
றிவை நின்னடியர் குறைகளைத் தினையளவாய்த் தீர்க்
கவெண்ணி, பாதகம்விலக்கியுன் பாதகமலத்தினைப் பா
வித் துதிக்கவருள்வாய்- பகமேறு மாலநகர் பூத்தூரு
ணிக்கரை பகர்சித்திவிநாயக்க்கடவுளே (6)

நீடித்துனடிதனை நினைக்குநன் னினைவுகள் நீங்கா
திருக்கவேண்டும்-நித்தமுன் னடியரைப் பூசித்துவழி
படும் நினைவுதவறாதவேண்டும், வாடித்தவித்திடும் ம
க்கள்தம்துயர்களை மாற்றுதற்கேதுவேண்டும் வண்ட

ப்புரட்டர்தம் மனைவாசல்செல்லாத மதியைக்கொடுக்க
வேண்டும், ஓடித்திரிந்தலைந்துழல்கின்றமனமதை
யொடுக்கியாட்கொள்ளவேண்டும்-ஒருபோது மாயையிற்
செல்லாமலுன்பத முகந்தெனக்கருளல் வண்டும் பா
டித்துதித்திடும் பக்தர்க்கிரங்குருங்கியருள் பாலிக்குமுமை
பாலகா-பகமெரு மாலநகர் புத்தூ ருணிக்கரை பகர்
சித்தி விநாயகக்கடவுளே (7)

பூவினற்பிள்ளையா யுதித்த்தேதவிர நின் புண்ணி
யப் பொற்பதத்தை-பூந்தியிற்கொண்டுநான் ஒரு பொ
ழுதிலாயினும் போற்றித்திரிந்தேனிலேன், காவினிற்
பக்தர்கள் காய்கனியருந்தியே கடும்பசியதா யிருந்து
கனவிலும் மறவாது தோத்திரஞ் செய்துநின் கருணை
யைக்கைக்கொள்ளுவார், மூவரும்முனைத்துதித் தருள்
பெறுவெரென்றுநூல் முறையிடுவதாலுன்றனை- முதல்
வனெனவெண்ணியே நம்பிமோசம்போகும் முறைமை
யதுநலமாகுமோ, பாவலர்கள் துன்பந் துடைத்துநற்
பாக்கியமருள் பராபரன்னருள்பாலகா-பகமேறுமால
நகர் புத்தூருணிக்கரை பகர்சித்திவிநாயகக் கடவுளே

முப்பத்துமுக்கோடி தேவர்முனிவோர்களும் மு

தன்மைபெறு மூர்த்திஐந்தும்-முன்னமேயுனைத்தொ
ழுது பின்னமதுவாராமல் முடித்துவிடுவாய்காரியத்தை
தெப்பமதிலாடிவரு மக்கள் தந்துயர்களைத் தீர்த்துநற்க
ரையேற்றியே-திடமுடைய கசமுகன் றனைவென்ற
செம்மலெனச் சீரியரெல்லாமுரைப்ப, வெய்ப்புற்று
மனைமக்கள் சுற்றமெனவெண்ணியே யிறுமாந்திருக்கு
மென்னை,இகபரத்தவரெலா நகையாம லென்னுடை
ய விருவினையகற்றியருள்வாய், பப்புவர்கள்கோட்ட
மும்பாரிலுனதாட்டமும் பகருதற்கருசனல்லேன்-பக
மேறுமாலநகர் புத்தூணிக்கரை பகர்சித்தி விநாயகக்
கடவுளே (9)

ஆதிநீ ஜோதிநீ யண்டநீ பிண்டநீ அஷ்டபாலகரு
நீயே- அனலுநீ கானலுநீ யப்புநீ புவியுநீ அகண்டா ஆ
காசவெளிநீ, வேதநீ மாலுநீ, விமலநீ, யமலநீ, வேலனா
யவனுநீயே-வித்துமுளைரவிமதி, பகலிரவுமானநீ விளை
பொருளுமானவனுநீ, சீதம்நீ ஆதியுமந்தமுமிலாதநீதிகழ்
ழ்பதச் செல்வநீயே-சிற்றறிவினார் சொற்ற துதிபிழை
பொறுத்தெனது சிந்தைமகிழ் செய்யவருவாய், பா
திமதி யரவணிப் பரமனுமை போற்றிடும் பக்தரக்ஷகா
லோலனே- பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை பகர்
சித்திவிநாயகக்கடவுளே (10)

ஐயனே நின்பெருமை யரிய்யயன்முதற்றேவர் அ
றியாதுமையல்கொள்ள-அன்புடனடத்திரு விளை
யாட லடியனே னறியாமையாற்புகலவே, மெய்ய
னே சிருஷ்டிஸ்திதி சம்காரமென்னுமுத்தொழிலுக்கு
மௌனம்பூண்டாய்-மெய்விரதபக்தர்க் கிரங்கியருள்
செய்திட்ட மேன்மையைத் தெரியவசமோ, செய்ய
னே கல்விநகர் வாழ்கறுப் பேந்திரன் செய்தபாப்பதி
னென்றையும்- சிறியன்மொழியென்று கைவிடா து
னருள்செய்திடத் தினமுனைப்போற்றிநின்றேன் பை
யாவ மான்மழு தரித்தவனிடத்துறை பாராசக்தி தந்த
மைந்த- பகமேறு பாலநகர் புத்தூருணிக் கரை பகர்
சித்திவிநாயகக்கடவுளே (11)

## வாழ்த்து

கல்விநகர்வாழுங் கணபதிதாள் போற்றிசெயும்
செல்வரெலாம்வாழி செழுந்தமிற்- சொல்பதிகம்
வாழியவன் புகழும் வாழிதமிழ்மகளும்
வாழி நீடுழி மகிழ்ந்து.

## சித்திவிநாயகர் பதிகம் முற்றும்

கணபதி துணை

ஆலம்பற்றுப் புத்தூருணி

# சித்திவிநாயகர் பஞ்சகம்

## காப்பு

வேதப் பொருளாம் விநாயகனை வேண்டியவன்

பாதத் துணைமனத்தாற் பற்றினேன்-சீதப்

பொழில் சூழ்ந்த வாலநகர்ப் புத்தூருணியாற்(கு)

அழகமையப் பாட லமைத்து

## நூல்

விண்ணிலை பெற்றவர் மண்மகள் புத்திரர்
வீழ் நிலை யனுகாதே
வேண்டி நினைத் தெமை யாண்டரு ளாண்டவ
விரைவினில் வருகவென,
எண்ணிய நித்திய வாழ்வினை யெள்ளிநின்
இணையடி தொழ வெதிர் வந்
தின்னருள் தந்தவர் இன்பவளம் பெரி
தெய்த முனைந்து புகும்,
பெண்ணிரு வர்க்கொரு கண்ணென வுற்ற
பெரும் பொருளே சிவனார்

பெற்று வளர்த்து விநாயகன் னென்றெரு
பெயருஞ் சூட்டியிடும்
திண்ண முறுங்கலிறேயடி பணிவோம்
செய்வினை தீர்த் தருள்வாய்
சித்தியி னாயக முத்தியி னாபக
சித்தி விநாயகனே (1)
வித்தமும் உத்தம வித்தையும் முக்தியும்
விற்பனர் வேண்ட வருள்
வேழ முகத்தவ வால நகர்க்குறு
வித்தக மெய்ப் பொருளே
பத்திய துத்திய மத்த நினற்புகழ்
பாடிய பாவலவர்
பழவினை வழியிடை யழிவது தவிர்முறை
பண்ணிய புண்ணியனே
கத்தனை முத்தனை உத்தம சிந்தனைக்
கடவுளர் தலைவனை மாங்
கனி பெற வொருமுறை சூழ்வரு தெய்வக்
களிறே பணி புரிவோர்
சித்தியுறப் புரி சுத்த நலப் பொருள்
தின்மை தவிர்த்தருளே

சித்தியினாயக முக்தியினாயக

சித்திவிநாயகனே (2)

பொருள் பொருளென்றழி பொருள்களை நாடிப்
புவியிடை வாழ் வெய்தும்-
புரையுறு மறிவினர் நிறைபறி வடைவது
புரிபெருமானன்றே
மருள்மிகு மனையவள் மகள்மகன் மருமகன்
மனை நில முதல் வெலாம்
வருவது மழிவது மொருநொடி யினிலென்
மதிவர வருள் பொருள் நீ
இருள்கெடு மறிவிடை நினதுரு விலகிட
வினிதருள் புரிபெருமான்
எமையுன தடியவாடியவ ரடியவர்
எனவெணி யாண்டருள்வாய்,
திருமகள் மருமக னெனவரு மிகுபுகழ்
தெய்வீக மாமணியே
சித்தியினாயக முத்தியினாயக
சித்திவிநாயகனே (3)
வெண்பா வகவல் ஈலிப்பா வஞ்சியும்
வேறுள கவிவகையும்

விழலர்களைப் பொருள் பெறவேணி யுற்றவர்
வீழ் புகழ் பாடியிசைத்,
தண்டா திபர்பணி தண்டாமரை மலர்
அடியினை யுடைய நினை
யன்போடும் புக ழாது மயங்கிய
வறிவிலி குற்றமெலாம்,
கொண்டாளும் பொருள் நீயென வெண்ணியுன்
குறைகழலே பணிவேன்
குசைநுனி யொத்தநுண் மதியுடை யுத்தமர்
கூறிய மெய்ப்பொருளே
சென்டாலுயர்வரை வென்றவன் முன்னவ
தேவ சிகாமணியே
சித்தியினாயக முத்துயினாபக
சித்தி விநாயகனே (4)

ஆல நகர்க்கொரு மூல முதற்பொருள்
ஆன மறைப் பொருளே
ஐங்கர தெய்வ நினங்குசபாசமும்
அன்பர்கள் இன்பமுற
வேலவ னந்தமிழ் வேடுவ மங்கையை
வேண்டி மணம் புரிய

மிக்க நலந்தர வுற்றது கண்டனம்
வேறுள கவலையெலாம்,
கால னெனப்பெயர் மேவி யொருத்த னெம்
கால மளப்பதெல்லாம்
கழிய மிகப்புகழ் பழகிய வாழ்வுறு
கதிபெற வருள்புரிவாய்,
சீல நெறிப்பெறு நூலவர் தேடிய
செம்மை நெறிப்போருளே
சித்தியினாயக முத்தியினாயக
சித்தி விநாயகனே (5)

## வாழ்த்து

வாழிதமிழ் வாழியறம் வாழிபொருள் வாழிநலம்
வாழிமழை வாழிமறை வாழிசிவம்-வாழியரி
வாழிகுகன் வாழிசிவை வாழி கணபதிதாள்
வாழியநா வல்லார் மகிழ்ந்து.
சித்தி விநாயகர் பஞ்சகம் முற்றும்

---

கஜமுக ஸஹாயம்

## சித்திவிநாயகர் அகவல்

பிரணவப் பொருளே பெருந்தகை யாளா
அன்புடை யார்கட் கறிதற் கெளியாய்
அன்பிலார் நாடி யறிதற் கரியாய்
நகர வணிகர் நாட்டுக் கோட்டையில்
சிவபெரு மான்வாழ் திருப்பதி யாகிய
கணிப்பருஞ் சிறப்புடைக் காளையர் கோயில்
மாதவர் புகழு மயூர கிரியெனும்
குமரவே ளமர்ந்த குன்றக் குடியாம்
இருநல் லூர்கட் கிடைநிலைத் தாகிய
ஆல நகரிடை யமைந்த கோயிலில்
பிலவங்க வாண்டு நிலவிய சித்திரை
மதியினி லமைத்த துதிபெறு கோயிலில்
வாழ்வாய் பெரும்பே ரின்பவாழ் வருளும்
தேவா பெரியோர் தேடிப் பணியும்

விநாயக வெம்முடை வினைதீர்த் தருள் செயும்
தலைவனே முன்னாள் தம்முடல்நீத்து
முத்திபெற்ற முனிவர் குலம்விளங்
கிடத்துக் கணித்தா யியன்ற நியமத்
திருக்கும் பொருளே எளியோர் தெய்வமே
வாழ்த்துவோர்க்கு கேற்ற வரமருள் தலைவனே
அறநிலை களமாய் அமைந்த மண்டபம்
முன்னிலை நிற்க முனிகணம் வணங்கும்
நன்னிலத் திருக்கும் நற்பெரும் பொருளே
புண்ணிய பயனாய்ப் புலவோர் புகழும்
கண்ணியப்பொருளே கடவுண் மாமணியே
ஔவைக் கரும்பொரு ளமைய வுணர்த்திக்
கயிலையங் கிரியைக் காண விரும்பலும்
திருக்கரத் தாலே விருப்புட னெடுத்துப்
பெருமான் கோலம் பெட்புடன் காண்டற்
கருள்செயும் செல்வனே அடியார்க் கெளியவனே
நாரையூர் வாழ்ந்த நம்பி யாண்டர்க்குக்
கல்விப் பொருளைக் கணிப்புற வருளி
அன்புடன் அவருத வமுதேற் றருளும்
பொல்லாப் பிள்ளையாம் புதுப் பெயர் பூண்டோய்

வேண்டிய வேண்டுகோள் விரும்பியாங் கடைய
முன்னர் நினக்கு முடிதாழ்த் தன்றியே
எத்தகை யவரும் இன்புற வியலாது
எனின்யாம் எளியேம் என்னே புகல்வோம்
உலகவாழ் விடையில் உறும் பெருங் கவலையில்
உழன்று மற்றது கழன்று பிழைக்கும்
வழியறி யாமல் மயங்குவார்க் கேற்ற

வரந்தந் தருள வந்த நாயகனே
சித்திவிநாயக திருவடி போற்றினேன்
இவ்வுல கிடையிற் செவ்விய வாழ்வும்
இனிப்பிற வாநல வின்ப வாழ்வும்
தந்தருள் புரிவாய் தயாசா கரனே
என்னையே நின்னருட் கேற்குமா றுதவி
உரிமையாக்கினேன் உவந்தேற்றருள்கவே
சித்திவிநாயகர் அகவல் முற்றும்

-----------------------------

குறிப்பு-- இப்புத்தகம் பரிசோதகர், பதிப்பித்தோர் விருப்பிற் கிணங்கப் பின்னுள்ள இரண்டு பிரபந்தங்கள் புதியனாக இயற்றிச் சேர்த்ததால் ஐந்து பிரபந்தங்கள் என்னும் முகப் பெயர் பெயர் மாறுபட்டு ஆறு பிரபந்தங்களாயின.

நா. கா பரிசோதகர்